


நல்லவே எண்ணல் வேண்டும்...,

எண்ணிய முடிதல் வேண்டும்...,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 122 | 27.10.2025 | MONDAY | IPPASI : 10 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 122 | 27.10.2025 | திங்கள்கிழமை | ஐப்பசி : 10 | விலை : ரூ.5/–

3 திருவெறும்பூர் தொகுதியில் மழையில் இடிந்த வீடு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிதியுதவி

4 நெல் கொள்முதலில் திமுக அரசு சாதனை படைத்துள்ளதா? புள்ளி விவரங்களுடன் மறுக்கும் அன்புமணி

2 'வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டினை நாட்டு மக்கள் கொண்டாட வேண்டும்' 'மனதின் குரலில்' பிரதமர் அழைப்பு

# ஆசிய போட்டியில் தங்கம் வென்ற கபடி வீரர்கள்: தலா ரூ.25 லட்சம் வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்!

சென்னை: அக்.27-

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோருக்கு ஊக்கத்தொகையாக தலா ரூ.25 இலட்சத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'முதல்வர் ஸ்டாலின் முகாம் அலுவலகத்தில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோரை பாராட்டி, ஊக்கத்தொகையாக தலா 25 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோருக்கு ஊக்கத்தொகையாக தமிழக முதல்வர் தலா 25 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை இன்றைய தினம் வழங்கினார்.

பஹ்ரைன் நாட்டின் ரிப்பா நகரில் அமைந்துள்ள ஈசா ஸ்போர்ட்ஸ் சிட்டியில் 19.10.2025 முதல் 23.10.2025 வரை நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் கபடி விளையாட்டு, வரலாற்றில் முதன்முறையாக அறிமுகமானது. சுற்றுப்போட்டித் தொடராக (Round Robin) நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ஏழு நாடுகள் பங்கேற்றன. இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கு முன்பு ஏழு அணிகள் ரவுண்ட் ராபின் வடிவத்தில் போட்டியிட்டன. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகள் இரண்டிலும் அசத்தலான ஆட்டங்களுடன் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.




இந்த வெற்றியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு திறமையான கபடி வீரர்கள் திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் (ஆண்கள் பிரிவு) மற்றும் சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த கார்த்திகா ரமேஷ் (பெண்கள் பிரிவு) ஆகியோர் இந்திய அணியின் வெற்றிக்குக் காரணமான முக்கிய வீரர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த அபினேஷ் மோகன்தாஸ் என்பவர் 2019 முதல் 2025 வரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (ஷிஞிகிஜி) தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு தேனியில் உள்ள விளையாட்டு விடுதியில் முறையான பயிற்சி பெற்று தனது திறனில் முன்னேற்றம் கண்டுள்ளார்.

சென்னை, கண்ணகி நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் கார்த்திகா ரமேஷ் என்பவர் தேசிய அளவிலான SGFI, Khelo India மற்றும் Federation Nationals உள்ளிட்ட போட்டிகளில் மொத்தம் 11 முறை தமிழ்நாட்டிற்காக விளையாடி, அதில் 8 பதக்கங்களை வென்ற சிறப்புடைய திறமையான விளையாட்டு வீராங்கனை ஆவார்.

மேலும், அவர் 5 முறை தமிழ்நாடு அணியின் அணித்தலைவராக (Captain) பொறுப்பேற்று அணியை வழிநடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவர் தொடர்ந்து வெளிப்படுத்திய விளையாட்டு திறமைக்காக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) உயரிய ஊக்கத் திட்டமான High Cash Incentive (HCI) திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளார். இளையோர் பெண்கள் இந்திய கபடி அணியின் துணை அணித்தலைவராக (Vice Captain) பணியாற்றி, இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்தும் சிறப்பான தலைமைத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆசிய அரங்கில் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை அங்கீகரிக்கும் விதமாக, தமிழக முதல்வர் தலா ரூ.25,00,000/ (இருபத்தைந்து இலட்சம்) என மொத்தம் ரூ.50,00,000/ (ஐம்பது இலட்சம்) ஊக்கத் தொகை வழங்கினார். முதல்வரின் உத்தரவின்படி, ரூ.15,00,000/ உயரிய ஊக்கத்தொகை (HCI) மற்றும் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த தமிழ்நாட்டின் கபடி நட்சத்திரங்களின் சிறந்த சாதனையை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து கூடுதலாக ரூ.10,00,000/ வழங்கப்பட்டுள்ளது.

இந்த சாதனை தமிழ்நாடு ஒரு முன்னணி விளையாட்டு மாநிலமாக உருவெடுத்து வருவதற்கான உறுதியான சான்றாகும். விளையாட்டாளரை மையப்படுத்திய திட்டங்கள், அறிவியல் சார்ந்த பயிற்சி முறைகள் மற்றும் மேம்பட்ட விளையாட்டு உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம், இந்திய அளவிலான சாம்பியன்களை உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேற்றப் பயணத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்நிகழ்வின்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா உள்ளிட்டோர் உடனிருந்தனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற நம் கபடி வீரர்கள் கண்ணகி நகர் கார்த்திகா மற்றும் திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் ஆகியோர் சென்னை திரும்பியதும், நேராக எனது இல்லத்துக்கு அழைத்துப் பாராட்டி, இருவருக்கும் தலா 25 லட்ச ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கினேன்.

கண்ணகி நகருக்கு நான் சென்றபோதெல்லாம் அங்கு வசிக்கும் மக்கள் என்னிடம் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தர உத்தரவிட்டிருந்ததை நினைவுகூர்ந்து, "உங்க ஏரியாவில் இப்ப பிரச்சினைகள் தீர்ந்திருக்கா?" என்று கார்த்திகாவிடம் கேட்டேன். கடந்த 4 ஆண்டுகளில் பெருமளவில் கண்ணகி நகர் முன்னேறியிருப்பதாகப் புன்னகையோடு சொன்னார்.

கார்த்திகா அவர்களும் அபினேஷ் அவர்களும் மேலும் சில உதவிகளையும் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அவற்றையும் நிறைவேற்றித் தருவோம்.

நேற்று நான் பைசன் காளமாடன்இல் கண்ட மணத்தி கணேசன் தொடங்கி, இன்று அபினேஷ், கார்த்திகா வரை எளிய பின்புலங்களில் இருந்து சாதிக்கும் ஒவ்வொரு வீரரின் வெற்றியிலும் சமூகநீதி மண்ணான தமிழ்நாடு பெருமை கொள்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் அருகே கலை பண்பாட்டுத்துறையின் மூலம் "மதுரை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவை" என்ற மாபெரும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, (25.10.2025) அன்று முரசு கொட்டி தொடங்கி வைத்து பார்வையிட்டார். அருகில மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., உடன் உள்ளார்

# வேங்கூர் குவளை பாலத்தில் உய்யக்கொண்டான் வாய்க்காலை தூர் வாரும் பணி : அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆய்வு

திருச்சி, அக்.27

திருச்சி மாவட்டம், முக்கொம்பு மேலணையிலிருந்து மாயனூர் கம்மாய் வழியாக உய்யக்கொண்டான் வாய்க்கால் பாசனமானது,

திருவெறும்பூர் மற்றும் தஞ்சை மாவட்ட எல்லை வரை உள்ள விவசாய நிலங்களுக்கு நீர் பாசனமாக விளங்கி வருகிறது

இந்நிலையில் உய்யக்கொண்டான் வடிகால் நீரானது திருவெறும்பூர் அருகே உள்ள வேங்கூர் ஊராட்சி பூசத்துறை இடையே உள்ள குவளை வாய்க்காலில் கலந்து வெளியேற்றப்படுகிறது

இந்நிலையில் இந்த குவளை வாய்க்கால் அருகே வேங்கூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம மக்கள் சுமார் 300 ஏக்கர் விவசாய நிலம் பயிர் செய்யப்பட்டு வருகிறது



இந்நிலையில் குவளை வாய்க்காலில் ஆகாயத்தாமரை அகற்றப்படாமலும் மேலும் தண்ணீர் தேங்கி நிற்பதால் 300 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிப்படைந்தன

மேலும் தகவல் அறிந்த திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வி அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று குவளைவாய்க்காலை பார்வை யிட்டதுடன், ஆகாயத்தாமரை உடனடியாக அகற்றி துரிதமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார் இந்த ஆய்வின்போது அரசு அதிகாரிகள் திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் வேங்கூர் கிராம மக்கள் விவசாயிகள் என ஏராளமான உடன் இருந்தனர்.

# மாணவர் பத்திரிகையாளர் திட்டம்

பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்காக....

உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

சமூகத்தில் அன்றாடம் நிகழும் கொடுமைகள், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக அரங்கேறும் செயல்பாடுகள்,

தங்கள் பகுதிகளில் இது போல் நடக்கும் சட்டத்திற்கெதிரான சம்பவங்களையும், அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெறாத அவல நிலைகளையும் ""சக்கர வியூகம்"" மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தில் இணைந்து எங்களுக்கு அனுப்புங்கள்

உண்மை தன்மையறிந்து பிரசுரிக்கப்படும்

எனவே, பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கனவிலுள்ள மாணவ, மாணவியர் கீழ்க்கண்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சக்கர வியூகம் பத்திரிகை முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப படிவத்திற்கு ஸ்கேன் செய்யவும்.

FOUNDER / EDITOR
SAKKRA VIYUGAM INVESTIGATE DAILY
HO: #70/53 A1, THILAGAR NAGAR 1ST ST,
ANUPPARPALAYAM, TIRUPPUR-641652
WWW.SAKKRAVIYUGAM.COM
88705 00000

# திருச்சியில் 1,800 கிலோ ரேஷன் அரிசி கடத்திய நபர் கைது : இருசக்கர வாகனம் பறிமுதல்

திருச்சி, அக்.27

திருச்சி மண்டல குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை காவல் கண்காணிப்பாளர் சியாமளா தேவியின் உத்தரவின் படியும், திருச்சி சரக காவல்துறை கண்காணிப்பாளர் வின்செண்ட் மேற்பார்வையில், திருச்சி அலகு காவல் ஆய்வாளர் அரங்கநாதன், உதவி ஆய்வாளர் மற்றும் போலீசார் உணவு பொருள் கடத்தல் மற்றும் பதுக்கல் சம்பந்தமாக திருச்சி தில்லைநகர், உறையூர் ஆகிய பகுதிகளில் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது உறையூர் மிஷன் மருத்துவமனை




அருகில் இருசக்கர வாகனத்தில் ரேஷன் அரிசி கடத்தி வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் அந்த பகுதியில் போலீசார் சோதனை மேற்கொண்டதில் உறையூர் தாத்தையாங்கார் ரோடை சேர்ந்த பாபு (வயது 45) என்பவர் ரேஷன் அரிசியை கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதற்காக எடுத்து வந்தது தெரிய வந்தது. இதையடுத்து ஷாஜகானை போலீசார் பிடித்து அவர் வாகனத்தையும் பதுக்கி வைத்திருந்த சாக்கு முட்டையில் கடத்தி வந்த 1,800 கிலோ ரேஷன் ரேஷன் அரிசியையும் போலீசார் பறிமுதல் செய்தனர் மேலும் பாபு என்பவரை கைது செய்து நீதிமன்ற காவல் உட்படுத்தி திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

# ‘வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டினை நாட்டு மக்கள் கொண்டாட வேண்டும்‘ ‘மனதின் குரலில்’ பிரதமர் அழைப்பு




புதுடெல்லி, அக்.27-
‘வந்தே மாதரம்’ பாடலின் 150வது ஆண்டினை நாட்டு மக்கள் கொண்டாட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி தனது மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற பிறகு ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று வானொலியில் மனதின் குரல் என்ற நிகழ்ச்சியில் நாட்டு மக்களுடன் உரையாடி வருகிறார். அதன்படி 126வது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி இன்று பேசியிருந்தார்.

தனது 30 நிமிட உரையில் அவர் பேசியதாவது: “மனதின் குரலில் நாம் உரையாட இருக்கும் ஒரு விஷயம், அனைவரின் இதயங்களுக்கும் மிகவும் நெருக்கமானது. இந்த விஷயம் நமது தேசியப் பாடல் பற்றியது. பாரதத்தின் தேசியப் பாடலான வந்தே மாதரம் குறித்தது. இது எப்படிப்பட்ட பாடலென்றால், இதன் முதல் சொல்லே கூட நமது இதயங்களின் உணர்வுகளைக் கொள்ளை கொண்டு விடுகிறது. வந்தே மாதரம் என்ற இந்த ஒரு சொல்லிலே தான் எத்தனை உணர்வுகள், எத்தனை சக்திகள்.

இயல்பான வகையிலே இது நமக்கு பாரத தாயின் தாய்மை உணர்வை உணரச் செய்கிறது. இதுதான் பாரத தாயின் பிள்ளைகள் என்ற வகையில் நமது பொறுப்புக்களைப் பற்றி நமக்கு அறிவுறுத்துகிறது. கடினங்கள் நிறைந்த வேளையாக இருந்தால், வந்தேமாதரம் என்ற கோஷம், 140 கோடி நாட்டு மக்களுக்குள்ளே ஒற்றுமை சக்தியை நிரப்பி விடுகிறது.

தேசபக்தி, பாரத தாயின் அன்பு, சொற்களுக்கு அப்பாற்பட்ட உணர்வுகள் என்றால், வந்தேமாதரம் அந்த வெளிப்படுத்த இயலா உணர்வுகளுக்கு வடிவம் தரும் பாடலாகும். பல நூற்றாண்டுக்கால அடிமைத்தனத்தில் சிதைந்து போயிருந்த பாரதத்தில் புதிய உயிர்ப்பை ஏற்படுத்த பங்கிம் சந்திர சட்டோபாத்யாயா அவர்கள் இதனை இயற்றினார். வந்தேமாதரம் 19ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக இருந்தாலும், இதன் உணர்வு பாரதத்தின் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான, என்றும் அழியா விழிப்புணர்வோடு இணைந்தது.

‘மாதா பூமி: புத்ரோ அஹம் ப்ருதிவ்யா’ என்று வேதங்கள் முழங்கி, பாரதிய கலாச்சாரத்திற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தன. பங்கிம்சந்திரர், வந்தே மாதரம் பாடலை எழுதி, தாய்த்திருநாட்டிற்கும், அதன் குழந்தைகளுக்கும் இடையேயான உறவினை, உணர்வு உலகில் ஒரு மந்திரத்தின் வடிவிலே இறுகப் பிணைத்தார்.

நான் திடீரென்று வந்தே மாதரம் பற்றி ஏன் பேசுகிறேன் என்று நீங்கள் எண்ணமிடுவீர்கள். வரும் நவம்பர் 7ம் தேதியன்று நம் வந்தே மாதரத்தின் 150வது ஆண்டில் நுழைய இருக்கிறோம். 150 ஆண்டுகள் முன்பாக வந்தே மாதரம் இயற்றப்பட்டு, 1896ம் ஆண்டில் ரவீந்திரநாத் தாகூர் முதன்முறையாக இதனைப் பாடினார்.

வந்தே மாதரம் பாடலில் கோடிக்கணக்கான நாட்டுமக்கள் எப்போதுமே தேசபக்தியின் எல்லையில்லா உணர்வினை உணர்ந்தார்கள். நமது தலைமுறைகள் வந்தே மாதரத்தின் சொற்களிலே பாரதத்தின் உயிர்ப்புடைய, மகத்தான ரூபத்தைக் கண்டிருக்கிறார்கள்.

நாம் இப்படிப்பட்ட பாரத தேசத்தைப் படைக்க வேண்டும். நமது இந்த முயற்சிகளில் நமக்கு என்றைக்குமே கருத்தூக்கமாக வந்தே மாதரம் இருந்துவரும். அந்த வகையிலே நாம் வந்தேமாதரத்தின் 150வது ஆண்டினை நினைவில் கொள்ளத்தக்க ஒன்றாக ஆக்க வேண்டும். வரவிருக்கும் தலைமுறையினருக்காக இந்தக் கலாச்சாரத் தொடரை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இனிவரும் காலங்களில் வந்தே மாதரத்தோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் தேசத்தில் பல நடக்கும். நாட்டு மக்களான நாமனைவரும் வந்தே மாதரம் என்ற இந்த பெருமைமிகு பாடலின் பொருட்டு, உள்ளெழுச்சியோடு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

உங்களுடைய ஆலோசனைகளை #VandeMatram150 என்று ஹேஷ்டேகில் அனுப்புங்கள். நான் உங்களுடைய ஆலோசனைகளுக்காக காத்திருப்பேன், நாமனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தை வரலாற்றுப் பூர்வமானதாக மாற்றும் பணியில் ஈடுபடுவோம்” என்றார்.

இதோடு சத் பூஜை, ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து நாட்டு மக்கள் கொண்டுள்ள பெருமிதம், மாவோயிசம், ஜிஎஸ்டி வரி சீர்திருத்தம், சத்தீஸ்கரின் அம்பிகாபூரிலே உள்ள நெகிழிக் குப்பையை அகற்றும் வகையிலான குப்பைக் கஃபே, பெங்களூரு ஏரிகள் மற்றும் குளங்களுக்கு புத்துயிர் அளித்து வரும் கபில் மற்றும் குழிவினர், குஜராத்தின் அலையாத்திக் காடுகள், சர்தார் படேலின் 150வது பிறந்தநாள் குறித்தும் இதில் பிரதமர் மோடி பேசி இருந்தார்.

# கும்பகோணத்தில் லாரிகளிலேயே முளைத்த நெல்மணிகள்




கும்பகோணம், அக்.27-
ரயிலில் ஏற்றி அனுப்புவதற்காக கும்பகோணம் ரயில் நிலையத்துக்கு லாரிகளில் ஏற்றி கொண்டு வரப்பட்ட நெல் மூட்டைகள், ரயில் வேகன்கள் வராமல் 8 நாட்களாக சாலையிலேயே லாரிகள் நிறுத்தப்பட்டுள்ளதால் மழையில் நனைந்து முளைவிட்டுள்ளன.

கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் ஆகிய 3 வட்டங்களில் உள்ள பெரும்பாலான பகுதிகளில் குறுவை அறுவடை நிறைவடைந்துள்ளது. சில இடங்களில் அறுவடை நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் 80 லாரிகளில் ஏற்றப்பட்டு, ரயில் மூலம் அனுப்புவதற்காக கும்பகோணத்துக்கு கொண்டு வரப்பட்டன. ஆனால், ரயில் வேகன்கள் வராததால், அந்த லாரிகள் அனைத்தும் திருநாகேஸ்வரம் புறவழிச் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, மழை பெய்து லாரிகளில் உள்ள நெல் மூட்டைகளில் நாற்றுகள் முளைத்துவிட்டன. எனவே, போர்க்கால அடிப்படையில் லாரிகளில் ஏற்றி கொண்டு வரப்பட்டுள்ள நெல் மூட்டைகளை இயக்கம் செய்ய மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

இதுகுறித்து லாரி ஓட்டுநர்கள் கூறியது: கும்பகோணம் பகுதி கொள்முதல் நிலையங்களில் இருந்து நெல் மூட்டைகளை ஏற்றிக் கொண்டு தார்ப்பாய் கொண்டு மூடி அக்.17ம் தேதி ரயில் நிலையத்துக்கு வந்தோம். ஆனால், ரயில் வேகன்கள் வரவில்லை என அலுவலர்கள் கூறியதால் திருநாகேஸ்வரம் புறவழிச் சாலையில் லாரிகளை நிறுத்தி வைத்துள்ளோம். இதனிடையே, அண்மையில் பெய்த மழையில் ஓரமாக உள்ள நெல் மூட்டைகள் நனைந்து முளைவிட்டுள்ளன.

கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை மட்டுமே அண்மைக்காலமாக நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் ரயில் மூலம் ஏற்றி அனுப்பி வருகின்றனர். கொள்முதல் நிலையங்களில் இருந்து எடுத்து வரப்பட்ட நெல் மூட்டைகளை இயக்கம் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால், 8 நாட்களாக லாரிகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கேட்டபோது வெளி மாவட்டங்களுக்கு கிடங்குகளில் உள்ள நெல் மூட்டைகளை மட்டும் இயக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது என்கின்றனர். தொடர்ந்து, மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ள நிலையில், லாரிகளில் உள்ள நெல் மூட்டைகளை இயக்கம் செய்ய மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், 80 லாரிகளில் உள்ள 36 ஆயிரம் நெல் மூட்டைகள் நிலை கேள்விக்குறியாகிவிடும் என்றனர்.

இதுகுறித்து நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் கூறியது: ரயில் வேகன் வராததால் லாரிகளில் ஏற்றப்பட்ட நெல் மூட்டைகள் இயக்கம் செய்யப்படவில்லை. அந்த லாரிகளில் உள்ள நெல் மூட்டைகள், அரைவைக்காக திருப்பூருக்கு அனுப்பப்பட உள்ளன. நெல் மூட்டைகளில் முளைத்துள்ள நாற்றுகளால், நெல்மணிகளுக்கு பாதிப்பு ஏற்படாது என்றனர்.

# “திமுக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!” பொதுக்குழுவில் ஜி.கே.வாசன் முழக்கம்

சென்னை, அக்.27-
மக்கள் விரோத திமுக அரசை வீழ்த்த வேண்டும் என்பதில் ஒத்த கருத்துடைய கட்சிகள் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து, வரும் தேர்தலில் திமுக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என தமாகா தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு கூட்டம் பல்லாவரத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அக்கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் கலந்து கொண்டு தொண்டர்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது; இந்த பொதுக்குழு கூட்டமானது வரும் சட்டப் பேரவை தேர்தலில் தமாகாவின் குரல் சட்டப்பேரவையில் ஒலிப்பதற்கான முன்னோட்டம்.

ஆகவே, கட்சியினர் கண்ணும் கருத்துமாக தேர்தல் பணிகளைச் செய்து தமாகாவுக்கு மரியாதையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழகத்தில் மரியாதைக்குரிய கட்சிகளில் முதல் வரிசையில் அமரக்கூடிய அளவுக்கு தகுதி பெற்ற கட்சி தமாகா மட்டுமே. நமக்கென ஒரு அரசியல் வரலாறு உண்டு. இங்கு வந்துள்ள நிர்வாகிகள் அனைவரும் மூன்று தலைமுறைக்குச் சொந்தக்காரர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. காமராஜர் காலத்தில் இருந்து கட்சியில் இருக்கும் நிர்வாகிகள் இங்கே அமர்ந்திருப்பது பெருமை சேர்க்கிறது. நமது பணி மேலும் தொடர வேண்டும்; சிறக்க வேண்டும். சட்டப்பேரவை தேர்தலில் கூட்டணி வெற்றிக்கு கூட்டு முயற்சி எடுக்க வேண்டும். நமது வேட்பாளர்கள் வெற்றி பெற உறுதி எடுக்க வேண்டும். இதை நோக்கித் தான் இந்தப் பொதுக்குழு கூட்டம் நடக்கிறது.

மக்கள் விரோத திமுக அரசை வீழ்த்த வேண்டும் என்பதில் ஒத்த கருத்துடைய கட்சிகள் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து, வரும் தேர்தலில் திமுக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தமாகா கடந்த மூன்று மாதங்களாக தேர்தல் வியூகங்களை அமைத்து கூட்டங்களை நடத்தி வருகிறது. எனவே, வருகின்ற சட்டப்பேரவை தேர்தலில் மகத்தான வெற்றி பெற, நாம் அனைவரும் மத்திய அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் 18 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற வலுவான கூட்டணியை உருவாக்கிடவும் கூட்டணி தொடர்பான முடிவுகளை எடுத்திடவும் ஜி.கே.வாசனுக்கு முழு அதிகாரமளித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கடந்த நான்கரை ஆண்டுகளில் திமுக அரசு நிறைவேற்றத் தவறிய தேர்தல் வாக்குறுதிகளையும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்ட விஷயங்களையும் கிராமம் முதல் நகரங்கள் வரை பிரச்சார இயக்கம் நடத்தி மக்களுக்கு விளக்கிச் சொல்லவும் தீர்மானிக்கப்பட்டது.



# ‘பைசன்’ பார்க்க நேரம் இருக்கிறது; விவசாயிகளை பார்க்க நேரமில்லையா? முதல்வருக்கு இபிஎஸ் கேள்வி

சென்னை, அக்.27-
ஜெய்பீம் முதல் கூலி, பைசன் வரை, சினிமாக்களைப் பார்க்க, ரசிக்க, கருத்து தெரிவிக்க தான் இன்றைய முதல்வருக்கு நேரம் இருக்கிறது. விவசாயிகளை, ஏழை எளிய மக்களைப் பார்க்க, அவர்களின் வேதனைகளைக் கேட்டறிய நேரம் இருக்காது என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘நாற்று நட்ட கைகளில், மழையில் நனைந்து முளைத்திருந்த நெல்லைப் பிடித்த போது, விவசாயிகளின் விவரிக்க முடியாத வேதனையை உணர்ந்தேன். ஆனால், இந்த நெல்லைப் பிடித்திருக்க வேண்டிய முதல்வர் ஸ்டாலினின் கை, படக்குழுவினரின் கைகளைப் பற்றிக் கொண்டிருக்கிறது. திரைப்படங்களை பார்ப்பதிலோ, திறமையான திரைப்பட குழுவினரை பாராட்டுவதிலோ எந்த தவறும் இல்லை.

ஆனால் தான் எதற்கு முதல்வர் ஆனோம்? என்பதையே மறந்துவிட்டு, முழுநேர சினிமா விமர்சகராக மாறிவிட்டார் இன்றைய பொம்மை முதல்வர் என்பதுதான் கவலை அளிக்கிறது. ஜெய்பீம் படம் பார்த்து உள்ளம் உலுக்கிப் போனவர், தன் ஆட்சியில் தொடர்கதையாக உள்ள அஜித்குமார் போன்ற லாக்கப் மரணங்களைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா?

ஜெய்பீம் முதல் கூலி, பைசன் வரை, சினிமாக்களைப் பார்க்க, ரசிக்க, கருத்து தெரிவிக்க தான் இன்றைய முதல்வருக்கு நேரம் இருக்கிறது. தென் தமிழகம் மழையில் மிதந்த போது, கூட்டணி பேச்சுவார்த்தைக்கு டெல்லி பறந்தவர் தானே நீங்கள்?. தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தின் போது கூலி திரைப்படம் பார்த்தவர் தானே நீங்கள்?.

அதே போலத் தான், இப்போதும் மழையால் நெல் முளைத்துப் போய், தாங்கள் உழைத்து பயிரிட்ட விவசாயிகளின் துயரங்கள் பற்றி கொஞ்சம் கூட யோசிக்காமல், பைசன் படம் பார்க்க மணிக்கணக்கில் நேரம் செலவழித்துக் கொண்டு இருக்கிறீர்கள். இதுவரை 31 உயிர்கள் பருவமழையால் இழந்திருக்க, மழை மற்றும் புயல் காலத்தில் மக்களைக் காப்பதற்கான உரிய நெறிமுறைகளை வகுப்பது பற்றி யோசிக்க நேரம் இருந்ததா?.

அது சரி, விவசாயிகளை, ஏழை எளிய மக்களைப் பார்க்க, அவர்களின் வேதனைகளைக் கேட்டறிய உங்களுக்கு நேரம் இருக்காது தான். விவசாயிகளின், மக்களின் கண்ணீரை உணராத இந்த குடும்ப மன்னராட்சியாளர்களுக்கு, மக்களாட்சியின் சக்தியை உணர்த்தப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை’ எனத் தெரிவித்துள்ளார்.

# ரத்த மாற்று சிகிச்சைக்குப் பிறகு 5 சிறுவர்களுக்கு எச்ஐவி தொற்று: ஜார்க்கண்டில் மருத்துவ அலட்சியம்

ராஞ்சி, அக்.27-
ஜார்க்கண்ட் மாநிலத்தில் தலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட 5 சிறுவர்களுக்கு எச்ஐவி நோய் தொற்று இருப்பது ரத்த பரிசோதனையில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எச்ஐவி தொற்றால் பாதிக்கப்பட்டவரிடம் இருந்து பெறப்பட்ட ரத்தம் இந்த சிறுவர்களுக்கு ரத்த மாற்று சிகிச்சையின் போது செலுத்தப்பட்டது இதற்கு காரணம் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

அந்த மாநிலத்தில் உள்ள சாய்ப்பாசா டவுனில் அமைந்துள்ள சதார் மருத்துவமனையில் உள்ள ரத்த வங்கியில் தலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட 7 வயதான தங்களின் குழந்தைக்கு ரத்த மாற்று சிகிச்சையின் போது எச்ஐவி நோயால் பாதிக்கப்பட்டவரிடம் இருந்து பெறப்பட்ட ரத்தம் செலுத்தப்பட்டதாக அவரது குடும்பத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை அன்று குற்றம் சாட்டினர். இதன் மூலம் இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது.

இதன் பின்னர் இது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள மாநில அரசு, 5 பேர் கொண்ட மருத்துவ குழு ஒன்றை அமைத்தது. இது குறித்து சனிக்கிழமை அன்று மருத்துவ குழுவினர் விசாரணை மேற்கொண்ட போது தலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட மேலும் 4 சிறுவர்களுக்கு எச்ஐவி பாதிப்பு இருப்பது ரத்த பரிசோதனையில் தெரியவந்தது. இந்த சிறுவர்கள் அனைவரும் சதார் மருத்துவமனையில் தொடர்ந்து ரத்த மாற்று சிகிச்சை பெற்று வந்துள்ளனர். இதை மருத்துவ குழுவினர் உறுதி செய்துள்ளனர்.

மருத்துவ குழுவின் முதற்கட்ட விசாரணையில் சதார் மருத்துவமனையில் செயல்படும் ரத்த வங்கியில் முறையான வழிகாட்டுதலை பின்பற்றவில்லை என தெரியவந்துள்ளது. ரத்த மாதிரி சோதனை, பதிவுகளை பராமரிப்பது, பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றுதலில் ஒழுங்கின்மையை மருத்துவ குழுவினர் கண்டறிந்துள்ளனர்.


இது குறித்து மாநில சுகாதாரத்துறைக்கு விரிவான அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். மேலும், தற்போதைக்கு சதார் மருத்துவமனையில் உள்ள ரத்த வங்கி அவசர மருத்துவ தேவைக்காக மட்டுமே பயன்படுத்த சுகாதாரத்துறை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

அதே நேரத்தில் எச்ஐவி நோய் தொற்று பரவ மருத்துவமனையில் உள்ள ரத்த வங்கிதான் காரணம் என்ற இறுதி முடிவுக்கு வர முடியாது. இது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், எச்ஐவி தொற்று பரவ இன்னும் பிற காரணங்கள் உள்ளன. பயன்படுத்தப்பட்ட ஊசிகள் மூலமாகவும் கூட எச்ஐவி தொற்று பரவும் என மாவட்ட அறுவை சிகிச்சை நிபுணரும், மருத்துவருமான சுஷாந்தோ குமார் மாஜி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாநில சுகாதாரத்துறை செயலாளர் மற்றும் மாவட்ட அறுவை சிகிச்சை நிபுணரின் அறிக்கையை கேட்டுள்ளது ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம். ஜார்க்கண்ட் மாநிலத்தின் மேற்கு சிங்பூம் மாவட்டத்தில் மட்டும் 515 எச்ஐவி தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளும், 56 தலசீமியா நோய் பாதிப்பு கொண்ட நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விவகாரம் தொடர்பாக ரத்த தானம் செய்த நபர்களின் விவரங்களையும் சுகாதாரத்துறை அதிகாரிகள் அடையாளம் காண நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் குடும்பத்தினர் தங்களுக்கு ஏற்பட்ட இந்த பாதிப்புக்கு மாவட்ட நிர்வாகம், மாநில அரசிடம் நீதி வேண்டும் என முறையிட்டுள்ளனர். இந்த மருத்துவ அலட்சியத்தை தங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஸ்ரீ சத்ய சாய் பாபா நூற்றாண்டு விழா: சென்னையில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கம்



சென்னை, அக்.27-
ஸ்ரீசத்ய சாய்பாபா நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை, திருவனந்தபுரத்தில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

புட்டபர்த்தி ஸ்ரீசத்ய சாய்பாபா பிறந்த நாள் நூற்றாண்டு விழா நவ.23ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, பயணிகள் வசதிக்காக தெற்கு ரயில்வே சார்பில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

அதன் விவரம்: சென்னை சென்ட்ரலில் இருந்து நவ.19, 21 ஆகிய தேதிகளில் இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06091), மறுநாள் மதியம் 2.15 மணிக்கு ஆந்திர மாநிலம் குண்டக்கல் சென்றடையும். மறுமார்க்கமாக, குண்டக்கலில் இருந்து நவ.20, 22 ஆகிய தேதிகளில் மாலை 5.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06092), மறுநாள் காலை 9.45 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்தடையும்.

அதேபோல, திருவனந்தபுரம் வடக்கு நிலையத்தில் இருந்து நவ.19, 21 ஆகிய தேதிகளில் மாலை 6.05 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06093), மறுநாள் காலை 11 மணிக்கு சத்யசாய் பிரசாந்தி நிலையத்தை சென்றடையும். மறுமார்க்கமாக, சத்யசாய் பிரசாந்தி நிலையத்தில் இருந்து நவ.20, 22 ஆகிய தேதிகளில் இரவு 9 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06094), மறுநாள் பிற்பகல் 3.55 மணிக்கு திருவனந்தபுரம் வடக்கு நிலையம் அடையும்.

இந்த சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு இன்று (அக்.26) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கல்லணை கிராமத்தில் திமுக சார்பில் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், வழங்கினார். அருகில் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.




# திசையன்விளை சண்முகநாத சாயிபாபா கோவில் வருஷாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் பாபா தரிசனம்

திசையன்விளை, அக்.27-

நெல்லை மாவட்டம் திசையன்விளை செல்வ மருதூர் பைபாஸ் ரோட்டில் அடைக்கலம் காத்த விநாயகர் கோயில் அருகில் அமைந்துள்ள சண்முகநாத சாயிபாபா கோவில் நெல்லை மாவட்டத்தில் உள்ள சாயிபாபா கோவில் களில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இக்கோவிலின் மூன்றாம் ஆண்டு வருஷாபிஷேக விழா நேற்று நடந்தது. காலையில் மங்கள இசையுடன் விக்னேஸ்வர பூஜை, 108 சங்கு பூஜை ,கணபதி ஹோமம், மகாவிஷ்ணு ஹோமம், மற்றும் பரிவார ஹோமங்கள் நடைபெற்றன. பின்னர் சண்முகநாத சாயிபாபாவிற்கு 108 சங்கு அபிஷேகம் ,விமான கலசத்திற்கு மற்றும் மகா கணபதி, சுப்ரமணிய சுவாமி ,மற்றும் தத்தாத்ரேயர் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் மதியம் சிறப்பு மத்யாகன ஆரத்தி நடைபெற்றது. அதிசய நிகழ்ச்சி யாக ஆரத்தி நிகழ்ச்சி முடிவில் சாய்பாபா சிலையின் மார்பு பகுதியில் இருந்து உதி என்று அழைக்கப்படும் விபூதி கொட்டியது. அதை பக்தி பரவசத்துடன் புண்ணிய பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து மாபெரும் அன்னதானம் நடந்தது. வருஷாபிசேக விழா நிகழ்ச்சி யில் திசையன்விளை தொழில் அதிபர் சேம்பர் கே.செல்வராஜ், ஐலேண்ட் தொழில் அதிபர் அரவிந்த் கணேசன் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு டாக்டர் அறம் வளர்த்த நாதன் மகாலட்சுமி தம்பதியினர் தலைமை வகித்தனர். சாயிபாபா கோவில் நிர்வாகி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஏ.எம்.இசக்கியப்பன் அனைவரையும் வரவேற்று விழா ஏற்பாடுகளை செய்து இருந்தார்.

# திருச்சியில் இரும்பு வியாபாரியிடம் பல லட்சம் மோசடி சேலம் இரும்பு ஆலை மேலாளர் மீது புகார்

திருச்சி, அக்.27-

திருச்சி விஸ்வாஸ் நகரை சேர்ந்தவர் இளங்கோவன். இவர் பெரிய நிறுவனங்களில் இரும்புகளை ஏலம் எடுத்து விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார்.இந்நிலையில் சம்பவத்தன்று இவர் இணையதளத்தில் பார்த்த போது சேலத்தை சேர்ந்த ஒரு இரும்பு கம்பெனி இரும்புகளை ஏலம் விடுவதாக அறிந்து அந்த கம்பெனி மேலாளரிடம் இளங்கோவன் பேசியுள்ளார்.

இதையடுத்து இளங்கோவன் தனது நண்பர்களுடன் சேலத்திற்கு சென்று இரும்பு தொழிற்சாலையை பார்த்துவிட்டு அவரிடம் 81 டன் இரும்பை ஏலத்துக்கு எடுக்க முடிவு செய்தார். பிறகு அவரிடம் பேசி முடிவு எடுத்து 81 டன் இரும்புக்கான பணம் ரூபாய் 49 லட்சத்து 45 ஆயிரத்து 982பணத்தை தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் இரும்பு கம்பெனி கணக்கிற்கு அனுப்பி வைத்தார்.

இதையடுத்து சேலத்தில் உள்ள தனியார் தொழிற்சாலையை சேர்ந்த மேலாளர் இளங்கோவனுக்கு லாரிமூலம் இரும்புகளை அனுப்பி வைத்தார்.

இதையடுத்து அந்த இரும்புகளை இளங்கோவன் எடை போட்டு பரிசோதனை செய்த போது 41, 580 டன்கள் மட்டுமே இருந்துள்ளது. இவற்றின் மதிப்பு ரூ 19 லட்சத்து 78 ஆயிரத்து 388 ஆகும். இதனால் அதிர்ச்சி அடைந்த இளங்கோவன் உடனடியாக சேலத்தை சேர்ந்த இரும்பு கம்பெனி மேலாளரிடம் கேட்டபோது, அவர் இளங்கோவனிடம் தகராறு செய்து மீதி பணத்தை தரமாட்டேன் என்று கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தெரிகிறது.

இதையடுத்து இளங்கோவன் தன்னை ஏமாற்றிய சேலம் இரும்பு கம்பெனியின் மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க கோரி திருச்சி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி இரும்பு கம்பெனி மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க கோரி மாநகர குற்றப்பிரிவு போலீசாருக்கு உத்தரவிட்டனர். இதையடுத்து மாநகர குற்றப்பிரிவு போலீசார் சேலத்தைச் சேர்ந்த இரும்பு கம்பெனி மேலாளர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஒகேனக்கல் காவிரியில் 32,000 கனஅடி நீர்வரத்து: அருவிகளில் வெள்ளம்

மேட்டூர், அக்.27–

ஒகேனக்கல் காவிரிக்கு நீர்வரத்து 32,000 கனஅடியாக உள்ள நிலையில், மேட்டூர் அணை நீர்மட்டம் 7வது நாளாக முழு கொள்ளளவான 120 அடியாக நீடிக்கிறது. கர்நாடக அணைகளில் இருந்து உபரி நீர் திறப்பு, இருமாநில எல்லையில் பெய்யும் மழையை பொறுத்து ஒகேனக்கல் காவிரி, மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், சரிவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரிக்கு, நேற்று காலை வினாடிக்கு 65 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை 43,000 கனஅடியாகவும், இன்று காலை 32,000 கனஅடியாகவும் குறைந்தது. அங்குள்ள அருவிகள் மற்றும் ஆற்றில் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று 6வது நாளாக தடை நீடிக்கிறது. மேலும் பரிசல் இயக்க 5வது நாளாக தடை தொடர்கிறது.



அதேபோல், மேட்டூர் அணைக்கு, நேற்று காலை 65,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 35,500 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து நீர் மின் நிலையங்கள் வழியாக, வினாடிக்கு 22,300 கனஅடி, உபரிநீர் போக்கி வழியாக வினாடிக்கு 12,700 கனஅடி, மேல்மட்ட மதகுகள் வழியாக கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் இன்று 7வது நாளாக முழு கொள்ளளவான 120 அடியாகவும், நீர் இருப்பு 93.47 டிஎம்சியாகவும் உள்ளது.

# துப்புரவு பணியாளர்களை தோட்டி, மாதாரி, டிச்சி வழிக்கிறவர்கள் என்று இழிசொல்லால் அழைத்தவர்களை தூய்மை பணியாளர்கள் என அழைக்க வைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி பெருமிதம்

சின்னாளபட்டி, அக்.27-

சின்னாளபட்டி பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தாட்கோவின் நலன்காக்கும் ஸ்டாலின் திட்டம் அடையாள அட்டையை அட்டை வழங்கப்பட்டது. தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரி தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கினார்.



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் நலன்காக்கும் ஸ்டாலின் மருத்தவ முகாம் தேவாங்கர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. முகாமில் சின்னாளபட்டி மற்றும் சித்தயன்கோட்டை பேரூராட்சி பகுதியை சேர்ந்த தூய்மை பணியாளர்களுக்கு மருத்தவ பரிசோதனைகள் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு தாட்கோ நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் மூலம் தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தாட்கோ மேலாளர் ஏ.செல்வகுமார் தலைமை தாங்கினார். பொது சுகாதாரதுறை துணை இயக்குநர் செல்வகுமார், ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன், வட்டார மருத்துவ அலுவலர் ஆனந்தீஸ்வரி பேரூர்கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா, துணைத்தலைவர் ஆனந்தி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு தூய்மை பணியாளார்கள் நலவாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கலந்துகொண்டு தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையை வழங்கிவிட்டு பேசும் போது பேரூராட்சி மற்றும் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை தோட்டி, மாதாரி, டிச்சி வழிக்கிறவர்கள் என்று இழிசொல்லால் அழைத்தவர்களை தூய்மை பணியாளர்கள் என அழைக்க வைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் தூய்மை பணியாளர்களுக்கு 15 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அவர் வாழ்வாதரத்தை காப்பாற்றி வருகிறார். திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை தூய்மை பணியாளர்களின் காவலராக மதிப்பிற்குரிய அய்யா ஐ.பெரியசாமி உள்ளார் அன்றிலிருந்து இன்றுவரை தூய்மை பணியாளர்கள் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றி வருகிறார். இதுவரை நலவாரியத்தில் மட்டும் 3 லு லட்சம்பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை காக்கும் காவல்தெய்வமாக தமிழக முதல்வர் செயல்பட்டு வருகிறார் என்றார். அதன்பின்னர் நிருபர்கள் மத்தியில் பேசிய ஆறுச்சாமி சின்னாளபட்டி பேரூராட்சியில் கடந்த 50 வருடங்களாக எந்த ஒரு அருந்ததியர் சமுதாய மக்கள் துப்பரவு மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெறவில்லை என கூறுகின்றனர். ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவரிடம் பேசி தகுதியுள்ள அருந்ததியர் சமுதாய துப்புரவு பணியாளர்களை துப்புரவு மேற்பார்வையாளராக பதவி உயர்வு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். நிகழ்ச்சியில் பேரூராட்சி துப்புரவு அலுவலர் மணிகண்டன், துப்புரவு மேற்பார்வையாளர்கள் சரளா, அகில்ராஜ், பேரூராட்சி அலுவலர்கள் கலைச்செல்வி, ராமமூர்த்தி, சின்னாளபட்டி பேரூர்கழக முன்னாள் செயலாளர்கள் அறிவழகன், மோகன்ராஜ், பேரூர்கழக பொறுப்புகுழு உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# 10 நாட்களுக்குப் பிறகு குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க அனுமதி

தென்காசி, அக்.27-

10 நாட்களுக்குப் பிறகு குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு காரணமாக குற்றால அருவிகளில் குளிக்க கடந்த 16ம் தேதி முதல் தடை அமலில் இருந்த நிலையில், தற்போது நீக்கப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தென்காசி மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கடந்த 16ம் தேதி முதல் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டது.



இதனிடைய கடந்த 20ம் தேதி அதிகாலை ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் குற்றாலம் மெயின் அருவி மற்றும் பழைய குற்றால அருவி கரைகள் கடுமையாக சேதம் அடைந்தன. அருவியை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு தடுப்பு கம்பிகளும், தரைத்தளமும் வெள்ளத்தினால் சேதம் அடைந்தது. இதனால் வெள்ளப்பெருக்கு குறைந்தாலும் மெயின் அருவி மற்றும் பழைய குற்றால அருவியில் குளிக்க விதிக்கப்பட்ட தடை நீட்டிக்கப்பட்டது.

ஐந்தருவி, புலி அருவிகளில் வழக்கம் போல் குளிக்க அனுமதிக்கப்பட்டது. கடந்து இரு நாட்களாக மெயின் அருவி கரையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த பணிகள் நிறைவடைந்ததால் தற்போது அருவிகளில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பழைய குற்றால அருவியில் சீரமைப்பு பணிகள் நிறைவு பெறாததால் அங்கு குளிக்க இன்னும் அனுமதி அளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருவெறும்பூர் தொகுதியில் மழையில் இடிந்த வீடு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிதியுதவி

திருச்சி, அக்.27-

திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட மேல கல்கண்டார் கோட்டை பஞ்சாயத்து தெரு எண் மூன்றில் வசித்து வரும் எபினேசர் ஏசுதாஸ் அவர்களின் வீடு மழையின் காரணமாக இடிந்தது அதை அறிந்த அமைச்சர் அந்த வீட்டை பார்வையிட்டு நிதியுதவி வழங்கி வீட்டை மறு கட்டமைப்பு செய்வதற்கு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் வட்டாட்சியர் விக்னேஷ் துணை ஆணையர் சரவணன் பகுதி கழகச் செயலாளர் தர்மராஜ் மாமன்ற உறுப்பினர் பியூலா மாணிக்கம் வட்ட கழக செயலாளர் சுப்ரமணி ஆகியோர் உடன் இருந்தனர்.

# பேருந்து தீப்பிடித்ததற்கு 400 செல்போன்களும் காரணம்? -தடயவியல் நிபுணர்கள் ஆய்வு

கர்னூல், அக்.27-

கர்னூலில் சொகுசு பேருந்து தீப்பிடித்து எரிந்ததில், 400 செல்போன் பேட்டரிகள் வெடித்து சிதறியதும் காரணம் என்று தகவல் வெளியாகி உள்ளது.

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம் சின்னத்தேக்கூரு கிராமம் அருகே நேற்று முன்தினம் அகிகாலை ஹைதராபாத்தில் இருந்து பெங்களூரு சென்று கொண்டிருந்த தனியார் சொகுசு பேருந்து விபத்தில் சிக்கி தீப்பிடித்தது. முன்னால் சென்று கொண்டிருந்த பைக் மீது, பேருந்து மோதியதில் பைக்கில் இருந்தவர் தூக்கி எறியப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஆனால், பைக் பேருந்தின் அடியில் சிக்கி சுமார் 350 மீட்டர் வரை டிரைவர் ஓட்டிச் சென்றதால் பைக் டேங்கில் இருந்த பெட்ரோல் முதலில் தீப்பிடித்துள்ளது.



அதன் பின்னர் பேருந்தை நிறுத்திய ஓட்டுநர், கீழே இறங்கி பாட்டிலில் இருந்த தண்ணீரை ஊற்றி தீயை அணைக்க முயற்சித்துள்ளார். தீ அணைக்கும் கருவி கூட பேருந்தில் இல்லை. சற்று நேரத்திலேயே தீ மளமளவென பரவியதும் தூங்கிக் கொண்டிருந்த பயணிகளை உஷார் செய்து இறக்காமல் பேருந்து ஓட்டுநர் தப்பியோடிவிட்டார். இந்நிலையில், பேருந்தில் லக்கேஜ் வைக்கும் கார்கோ பகுதியில்

400க்கும் மேற்பட்ட செல்போன்கள் ஒரு பெட்டியில் இருந்துள்ளது.

கார்கோ பெட்டியில் பரவிய தீயில் செல்போன் பேட்டரிகள் பயங்கர சத்தத்துடன் வெடித்துள்ளன. இதுவும் தீ வேகமாக பரவுவதற்கு காரணம் என்று தடயவியல் நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர். இதில் தீ மேலும் பரவி பேருந்தின் டேங்கருக்கு சென்று டேங்கரும் வெடித்துள்ளது. இதனால்தான் மிக விரைவாக தீ பேருந்தில் பரவியுள்ளது.

மேலும், பைபரால் பேருந்து பாடி கட்டுவதால் தீப்பிடிக்கும் போது மிக விரைவாக பற்றிக் கொள்கிறது. அதுமட்டுமல்லாமல் பேருந்துக்குள் ஏசி, மெத்தைகள், ஜன்னல் திரைச்சீலைகள் போன்றவையும் தீ எளிதில் பரவ காரணமாக உள்ளன.

போதையில் பைக் ஓட்டிய இளைஞரின் சிசிடிவி காட்சி: பைக்கில் அடிபட்டு உயிரிழந்த சிவசங்கர் (24) குறித்தும் போலீஸார் விசாரணை நடத்தினர். இது தொடர்பான சிசிடிவி காட்சி வெளியாகி உள்ளது. அதில், சிவசங்கர் ஒரு பெட்ரோல் பங்க்குக்கு அதிகாலை 2.30 மணிக்கு செல்கிறார். அவருடன் சென்ற மற்றொரு இளைஞர் சிறிது நேரத்தில் சென்று விடுகிறார்.

பைக்கில் இருந்து இறங்கிய சிவசங்கர் பெட்ரோல் போட யாரும் இல்லாததால் சத்தம் போடுகிறார். பின்னர் பைக்கை எடுத்துக் கொண்டு குடிபோதையில் தள்ளாடியபடி ஓட்டிச் செல்கிறார்.

இதனால் அவருடைய உடல் உறுப்புகள் தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தவிர பேருந்து விபத்தில் சதி திட்டம் இருக்குமா என்றும் நிபுணர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தாய்லாந்தில் நடைபெறும் அழகி போட்டியில் பங்கேற்க ராமநாதபுர விவசாயி மகள் தேர்வு



ராமேசுவரம், அக்.27-

தாய்லாந்தில் நவ.28ம் தேதி நடைபெறும் மிஸ் ஹெரிடேஜ் இன்டர்நேஷனல் 2025 அழகி போட்டிக்கு ராமநாதபுரம் மாவட்ட விவசாயி ஒருவரின் மகள் தேர்வாகியுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தெற்கு காக்கூரைச் சேர்ந்த விவசாயி கஜேந்திர பிரபு. இவரது மகள் ஜோதிமலர் (28) பி.டெக் முடித்து பெங்களூர் ஐடி நிறுவனத்தில் பணியாற்றி வருவதுடன் மாடலிங் செய்து வருகிறார். சமீபத்தில் புனேயில் நடந்த மிஸ் டூரிசம் அம்பாசிடர் ஹெரிடேஜ் இந்தியா 2025 போட்டியில் ஜோதிமலர் பங்கேற்றார்.

100க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் ஜோதிமலர் மிஸ் டூரிசம் அம்பாசிடர் ஹெரிடேஜ் இந்தியா 2025 பட்டத்தை வென்றார். இதனைதொடர்ந்து வருகின்ற நவ.28 தாய்லாந்தில் நடைபெற உள்ள ஹெரிடேஜ் இன்டர்நேஷனல் 2025 அழகி போட்டியில் இந்தியா சார்பில் கலந்து கொள்வதற்காக தேர்வாகி உள்ளார்.

இது குறித்துப் பேசிய ஜோதிமலர், "தாய்லாந்தில் சர்வதேச நாடுகளுக்கிடையே அமைதி, சுற்றுலா, கலச்சார பரிமாற்றத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்காக மிஸ் ஹெரிடேஜ் போட்டி நடைபெற உள்ளது. இதில் இந்தியாவில் இருந்து பங்கேற்பது மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் உள்ளது.

சர்வதேச மேடையில் இந்தியாவின் பாராம்பரிய, வளமான கலச்சாரம், மரபினை உலகிற்கு வெளிபடுத்துவதற்கு கிடைத்த வாய்ப்பாக கருதி பெருமையடைகிறேன்" என்று ஜோதிமலர் கூறினார்.

# நெல் கொள்முதலில் திமுக அரசு சாதனை படைத்துள்ளதா? புள்ளி விவரங்களுடன் மறுக்கும் அன்புமணி



சென்னை, அக்.27-

"நெல் கொள்முதலில் திமுக அரசு படைத்திருப்பது சாதனை அல்ல, கொடும் வேதனை. கடந்த 20 நாட்களுக்கும் மேலாக கண்ணீரில் மிதக்கும் டெல்டா விவசாயிகள் விடும் சாபம் திமுக ஆட்சியாளர்களை சும்மா விடாது" என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ்நாட்டில் விவசாயிகளிடம் அதிமுக ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்டதை விட மிகவும் அதிகமாக ஆண்டுக்கு சராசரியாக 42 இலட்சத்து 61 ஆயிரத்து 386 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும், இது பெரும் சாதனை என்றும் திமுக அரசு கூறியிருக்கிறது.

அரும்பாடுபட்டு விளைவித்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியாமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் வேதனையை தங்களின் சாதனை என திமுக அரசு தம்பட்டம் அடித்துக் கொள்வது கண்டிக்கத்தக்கது.

எப்போதெல்லாம் திமுக அரசு ஒரு விஷயத்தில் பெரும் தோல்வி அடைகிறதோ, அப்போதெல்லாம் கடந்த காலங்களில் நடந்த நிகழ்வுகளுடனான ஒப்பீடுகள், சராசரிக் கணக்குகள் ஆகியவற்றைத் தூக்கிக் கொண்டு வந்து தங்களின் தவறுகளை நியாயப்படுத்த திமுக அரசு முயலும். இப்போதும் கூட அதே உத்தியை திமுக அரசு கையாண்டிருக்கிறது. உழவர்களின் கண்ணீரில் திமுகவின் இந்த பொய் மூட்டைகள் கரைந்து விடும் என்பது தான் உண்மை.

திமுக ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளில் 1.70 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாக அரசு தெரிவித்துள்ளது. உண்மையில் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 4.80 கோடி டன் நெல் விளைவிக்கப்பட்டிருக்கிறது. அதில் மூன்றில் ஒரு பங்கை மட்டும் தான் திமுக அரசு கொள்முதல் செய்திருக்கிறது. இது சாதனையா, வேதனையா?

202324ஆம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 5,245 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், அதில் தமிழகத்தின் பங்கு வெறும் 4.52% மட்டும் தான். அதேநேரத்தில் பஞ்சாபில் 23.62%, தெலங்கானாவில் 12.15%, சத்தீஸ்கரில் 15.80%, ஒதிஷாவில் 9.17% நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. உழவர்களிடமிருந்து போதிய அளவு நெல்லை கொள்முதல் செய்யாமல் திமுக அரசு துரோகம் செய்கிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் தேவை?

உழவர்களுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2500 விலை கொடுப்பதாக திமுக அரசு பெருமைப்படுகிறது. ஆனால், ஒடிசாவில் ரூ.3169, ஆந்திரம் மற்றும் தெலங்கானாவில் ரூ.2869 வீதம் ஒரு குவிண்டால் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இது தமிழ்நாட்டு உழவர்களுக்கு திமுக அரசால் இழைக்கப்படும் துரோகம் அல்லவா?

உழவர்களுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2500 தருவது திமுக அரசு அல்ல. அதில் ரூ.2369 ஐ மத்திய அரசு தான் வழங்குகிறது. திமுக அரசின் சார்பில் வழங்கப்படுவது வெறும் ரூ.131 ஊக்கத்தொகை மட்டும் தான். அதுவும் கூட முந்தைய ஆட்சியில் ரூ.50 வழங்கப்பட்டு வந்தது. அதை கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.81 உயர்த்தியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் நெல்லுக்கு ரூ.2500 வழங்குவதாக சத்தியம் செய்த திமுக ஐந்தாண்டுகளில் வெறும் ரூ.81 உயர்த்தி வழங்கியிருப்பது சாதனையா, வேதனையா?

காவிரி பாசன மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்யப்படாததாலும், மழையில் நனைந்து நெல் வீணானதாலும் உழவர்கள் கண்ணீரில் மிதந்து கொண்டிருக்கின்றனர். அதைத் துடைக்க திமுக அரசு எந்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. மாறாக கடந்த கால புள்ளிவிவரங்களை காட்டி திமுக அரசு புளங்காகிதம் அடைந்து கொள்கிறது. இந்த வெற்று புள்ளிவிவரங்களால் காவிரி பாசன மாவட்ட உழவர்களுக்கு எந்த பயனும் இல்லை.

எனவே, ஒன்றுக்கும் உதவாத கணக்குகளைக் கூறுவதை விடுத்து காவிரி பாசன மாவட்டங்களில் நெல் கொள்முதலை தீவிரப் படுத்தி, உழவர்களின் கண்ணீரைத் துடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 20 நாள்களுக்கும் மேலாக கண்ணீரில் மிதக்கும் காவிரி பாசன மாவட்ட விவசாயிகள் விடும் சாபம் திமுக ஆட்சியாளர்களை சும்மா விடாது' எனத் தெரிவித்துள்ளார்.



# கோவை இஸ்கான் வளாகத்தில் 60,000 சதுர அடியில் ஸ்ரீஸ்ரீ ராமகிருஷ்ணர் கோயில் கட்டும் பணி தீவிரம்

கோவை, அக்.27-

கோவை இஸ்கான் வளாகத்தில், 60 ஆயிரம் சதுரடி பரப்பளவில் ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ணர் கோயில் கட்டும் பணி தீவிரமடைந்துள்ளது.

கோவை பீளமேடு கொடிசியா அருகே, இஸ்கான் ஸ்ரீ ஜெகந்நாதர் (ஹரே கிருஷ்ணா) கோயில் உள்ளது இங்கு ஸ்ரீஜெகந்நாதர், ஸ்ரீ பலதேவர், சுபத்ரா தேவி, ராதா கிருஷ்ணர் ஆகியோர் பக்தர்களுக்கு காட்சியளிக்கின்றனர். இக்கோயில் வளாகத்தில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான்) சார்பில் 60 ஆயிரம் சதுரடி பரப்பளவில், ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ணர் கோயில் கட்டும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கோயில் கட்டுமானப் பணி கடந்த 2001ல் அடிக்கல் நாட்டப்பட்டு, கடந்த 2016ம் ஆண்டு ரூ.30 கோடி மதிப்பில் பணிகள் தொடங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கோயில் கட்டுமானத்தின் பெரும் பகுதி நிறைவடைந்துள்ளது. அடுத்த வருடத்துக்குள் பணிகளை முடிக்க இஸ்கான் அமைப்பினரால் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, கோவை இஸ்கான் கோயிலின் உப தலைவர் மதுகோபால்தாஸ் கூறியதாவது: இக்கட்டிடம் தரைத்தளம், முதல் தளம், 2ம் தளம் ஆகியவற்றை கொண்டதாகும். 20 ஆயிரம் சதுரடி பரப்பளவில் அமையும் முதல் தளம், 5 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில், கர்ப்பகிரகம் 2,400 சதுரடி பரப்பளவில் ராதா கிருஷ்ணர், ஜெகந்நாதர், பலராமர், சுபத்ராதேவி ஆகியோர் வீற்றிருக்கும் இடமாகும். மேலும், இங்கு தெப்பக்குளம் அமைக்கப்படுவதோடு, ஸ்தல விருட்சமாக 'தமால்' மரம் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

மேலும், இரண்டாவது தளத்தில் 6 ஆயிரம் சதுரடி பரப்பளவில் இளைஞர்கள், அடுத்த தலைமுறைகள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், டைனமிக் எக்ஸ்சிபிட்டர் அரங்கு அமைக்கப்பட உள்ளது. தொழில்நுட்ப வசதியுடன், ஏ.ஐ. நுட்பத்தில், எளிமையான கேள்வி, பதில்களுடன் இந்த அரங்கு அமையும். கோயிலின் நான்கு திசைகளில் இருந்தும் நுழைவுவாயில் கோபுரம் அமைக்கப்பட உள்ளது. இவை தென்னக சிற்ப அமைப்பில், பளிங்கு கற்களால் அமைக்கப்படுகிறது. கோயிலின் உள்ளே 140க்கும் மேற்பட்ட தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூண்களிலும் பாகவத ஸ்லோகங்கள் பதிக்கப்பட்டுள்ளன.

தரையில் இருந்து 108 அடி உயரத்தில் விமானம் உள்ளது. அதில், 13 அடி உயரம் கொண்ட தங்க முலாம் பூசப்பட்ட சுதர்சன சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் பொதுமக்களுக்கு ஆன்மிக போதனைகள் குறித்த அரங்கு அமைக்கப்படுகிறது. இக்கோயில் தமிழகத்தில் மிகப்பெரிய ராதாகிருஷ்ணன் கோயிலாக இருக்கும். இஸ்கான் கோயிலில் இது ஒரு மைல்கல் வளர்ச்சியாகும்.

மேலும், கோவையில் மேலும் ஒரு கோயிலாக இல்லாமல், இது கலாச்சாரம், கல்வி மையமாக திகழப் போகிறது. வேத கலாச்சாரத்தை, பாரம்பரியத்தை எளிமையாக அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் முக்கிய இடமாக இது அமையும். பக்தி வேதாந்த அகாடமியின் கல்விக் கூடம் ஒரு பகுதியாக உள்ளது. கோவை இஸ்கான் தலைவர் பக்தி விநோத சுவாமி மகாராஜ் தலைமையில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.



# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பூத்துக் குலுங்கும் மலர்கள்

குன்னூர், அக்.27-

குன்னூரில் பெய்து வரும் மழை காரணமாக சிம்ஸ் பூங்காவில் பூத்துக் குலுங்கும் பூக்கள் ரம்மியமாக காட்சியளிக்கின்றன.

நீலகிரி மாவட்டம், குன்னூரில் மிகவும் பிரசித்தி பெற்ற சுற்றுலா தலம் சிம்ஸ் பூங்கா. இந்த பூங்காவுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இவர்களை கவரும் வகையில், பல்வேறு மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்த ஆண்டு இரண்டாம் சீசனான அக்டோபர், நவம்பர் மாதத்துக்காக நடவு செய்யப்பட்டிருந்த 1.90 லட்சம் மலர் நாற்றுக்கள் மழையின் காரணமாக தற்போது பூத்துக் குலுங்குகின்றன.

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் உட்பட பல்வேறு நாடுகளை தாயகமாக கொண்ட பால்சம், சால்வியா, பிளாகஸ், காஸ்மாஸ், ஜின்னியா, பெகோனியா, பேன்சி, டெல்பினியம் போன்ற போன்ற மலர்கள் பூத்து சுற்றுலா பயணிகள் கண்ணுக்கு விருந்தாக காட்சி அளிக்கின்றன. பூக்களின் முன்பு நின்று சுற்றுலா பயணிகள் புகைப்படம் மற்றும் செல்பி எடுத்துச் செல்கின்றனர். மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பால் சிம்ஸ் பூங்கா களைகட்டி உள்ளது.

# சட்டப்பேரவை தேர்தலில் மதுரையில் விசிக போட்டி? திருமாவளவன் சூசக தகவல்



மதுரை, அக்.27-

மதுரையிலுள்ள ஒரு சட்டப்பேரவை தொகுதியில் விசிக போட்டியிடுவது பற்றி தொகுதி பங்கீட்டின்போது முடிவெடுக்கப்படும் என அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறினார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் திருமண விழா ஒன்றில் பங்கேற்க சென்னையில் இருந்து விமான மூலம் விசிக தலைவர் தொல். திருமாவளவன் மதுரை வந்தார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கை தமிழகத்திலும் மேற்கொள்ளப்படுவதற்கு அறிவிப்பு வெளியானது. இதற்கு அனைத்துக் கட்சிகளும் கூடி விவாதிக்கவேண்டும். தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா ஆகிய 3 மாநில சட்டமன்ற தேர்தலையொட்டி சிறப்பு வாக்காளர்கள் பட்டியல் திருத்த நடவடிக்கை அதிர்ச்சி அளிக்கிறது. இதை நடைமுறைபடுத்தகூடாது.

பிஹாரில் வாக்கு திருட்டு நடந்ததை போன்று தமிழகத்திலும் நடக்கும். இதற்காக திமுக, அதிமுக உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒன்று திரளவேண்டும். பல்கலைக்கழக சிறப்பு மசோதாவை திரும்ப பெறவேண்டும் என விசிக சார்பிலும் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். இது குறித்து உயர் கல்விதுறை அமைச்சர் கோவி செழியன் மறுசீராய்வு செய்யப்படும் என அறிவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. பாஜகவில் பொறுப்பில் இருந்து அண்ணாமலை வெளியேற்றப்பட்ட நிலையில், அவர் அரசியல் செய்ய களமின்றி போனதால் விரக்தியில் உள்ளார். எதை தின்றால் பித்தம் தெளியும் என்பது போல விசிகவுக்கு எதிராக அவதூறாக பேசுகிறார். எப்படி பிரச்சாரம் செய்தாலும் பாஜக தலைமைக்கு இனிமேல் அவர் மீது நம்பிக்கை இல்லை.

ஆணவ படுகொலைக்கு புதிய சட்டம் இயற்றக்கோரி விசிக பல்வேறு போராட்டங்களை நடத்தியது. இதற்கான சட்டம் இயற்றப்படும் என சட்டமன்றத்தில் முதல்வர் அறிவித்ததை வரவேற்கிறோம். நீதிபதி பாஷா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆணையம் இன்றியும் சட்டம் கொண்டு வரலாம். வரும் சட்டமன்ற கூட்ட தொடரில் புதிய சட்டம் கொண்டு வரவேண்டும்.

2026ல் சட்டப்பேரவை தேர்தலில் மதுரை மாவட்டத்திலுள்ள 10 தொகுதியில் ஏதாவது ஒன்றில் விசிக போட்டியிடுவது பற்றி தேர்தல் நேரத்தில் தொகுதி பங்கீட்டின்போது முடிவெடுக்கப்படும்" என கூறினார்.

# அடுத்த அதிபர் தேர்தலில் நான் போட்டியிட வாய்ப்பு உள்ளது: கமலா ஹாரிஸ்

வாஷிங்டன், அக்.27-

அமெரிக்க வரலாற்றில் பெண் அதிபர் நிச்சயம் இடம்பிடிப்பார் என தான் எதிர்பார்ப்பதாக ஜனநாயக கட்சியின் முன்னாள் துணை அதிபர் கமலா ஹாரிஸ் கூறியுள்ளார்.

அண்மையில் சர்வதேச ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அவர் பேட்டி அளித்தார். அதில் இது குறித்து பேசியுள்ளார். கடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்டு ட்ரம்ப்பை எதிர்த்து கமலா ஹாரிஸ் போட்டியிட்டார். தேர்தலில் ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அப்போதைய அதிபர் ஜோ பைடன் பாதியில் விலகிய நிலையில் கமலா ஹாரிஸ் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது. இவர் தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவர்.

"நிச்சயம் எனது பேர பிள்ளைகள் வெள்ளை மாளிகையில் பெண் அதிபர் ஒருவர் பதவியில் இருப்பதை தங்கள் வாழ்நாளில் பார்ப்பார்கள் என நம்புகிறேன். அது நானாக கூட இருக்கலாம். அடுத்த அதிபர் தேர்தலில் நான் போட்டியிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. இருப்பினும் அது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. அரசியலில் எனக்கு எதிர்காலம் உள்ளதாக நம்புகிறேன்.

நான் கருத்து கணிப்புகளை கருத்தில் கொள்வது இல்லை. அப்படி இருந்திருந்தால் நான் தேர்தலில் போட்டியிட்டு இருக்க மாட்டேன், இங்கு அமர்ந்து பேசி இருக்கவும் மாட்டேன். தன் மீதான விமர்சனங்களை அதிபர் ட்ரம்ப்பால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை" என கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

# நெல்லின் ஈரப்பதத்தை அதிகரிக்க மத்திய குழுவிடம் விவசாயிகள் கோரிக்கை



திருச்சி, அக்.27-

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் வாளாடி திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்தில் மத்திய உணவு துறை துணை இயக்குநர் ராஜ் கிஷோர் சஹி தலைமையிலான குழுவினர் இன்று ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் தமிழகத்தில் குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையால் நெல்லின் ஈரப்பதம் அதிகரித்து விட்டது. எனவே நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என தமிழக முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடிக்கு அண்மையில் கடிதம் எழுதியிருந்தார்.

இதையடுத்து, தமிழகத்தில் நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்ய 3 மத்தியக்குழுக்களை மத்திய உணவுத்துறை அனுப்பி உள்ளது. காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு குழு 2 நாட்களாக ஆய்வுப் பணிகளை தொடங்கி நடத்தி வருகிறது. திருச்சி மற்றும் தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் ஆய்வு செய்ய திருச்சிக்கு வந்து தனியார் ஓட்டலில் தங்கியிருந்த 2 குழுக்கள் நேற்று முன்தினம் திடீரென நாமக்கல், கோவை பகுதியில் உள்ள செறிவூட்டப்பட்ட அரிசி தயாரிப்பு ஆலைகளில் ஆய்வு செய்ய சென்றனர். அக்குழுவினர் அக்.26 வரை ஆய்வு செய்வார்கள் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி திருச்சி, புதுக்கோட்டை, தேனி, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆய்வு செய்ய மத்திய உணவு துறை துணை இயக்குநர் ராஜ்கிஷோர் சஹி (ஆர்.கே. சஹி) தலைமையிலான குழுவினர் இன்று திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் வாளாடி திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்தில் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.

அப்போது அங்கிருந்த விவசாயிகள், 'மழையால் அறுவடைப் பணிகள் தாமதமாகி வருகிறது. அறுவடை செய்த நெல்லை காய வைக்க முடியவில்லை. எனவே நெல்லின் ஈரப்பதத்தை உயர்த்தித்தர வேண்டும்' என கோரிக்கை விடுத்தனர்.

மாந்துரையைச் சேர்ந்த விவசாயி பீட்டர் பவுல்ராஜ் கூறுகையில், "லால்குடி வட்டம் முழுவதும் மழையால் வயல்கள் அனைத்தும் மூழ்கி உள்ளன. தண்ணீரை வடிய வைக்க முடியவில்லை. நான் மைக்கேல்பட்டியில் 5 ஏக்கர் நெல் பயிரிட்டேன். மழையால் அறுவை பணிகள் பாதித்தது. இதனால் ஏக்கருக்கு 5 மூட்டை நெல் மட்டுமே அறுவடை செய்ய முடிந்தது. ஏக்கருக்கு 60 மூட்டை நெல் கிடைத்த நிலையில் தற்போது 5 மூட்டை மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம். எனவே ஈரப்பதத்தை அதிகரித்துத்தருவதோடு, மத்திய அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

அதைக்கேட்டுக் கொண்ட ஆய்வுக்குழுவினர் விவசாயிகளின் நெல் மாதிரிகள், கொள்முதல் நெல் மாதிரிகளை சேகரித்தனர். கருவிகள் கொண்டு நெல்லின் ஈரப்பதத்தை பரிசோதித்தனர். தொடர்ந்து நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்தில் குழுவினர் ஆய்வு செய்தபோது, அங்கு போதிய இடவசதி இல்லை. கொள்முதல் நிலையத்தில் ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இதனால் நெல் அளவிடும் பணிகள் தாமதமாவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

அதை தொடர்ந்து ஆய்வுக் குழுவினர் பூவாளூர், கோமகுடி, கொப்பாவளி ஆகிய திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஆய்வு செய்து வருகின்றனர். ஆய்வின் போது, லால்குடி வருவாய் கோட்டாட்சியர் ஸ்ரீதர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக திருச்சி மண்டல மேலாளர் குமரவேல், வட்டாட்சியர் ஞானாமிர்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000